920

உ

ஓம் குருப்யோ நம:

23 JUN 1919

ஸ்ரீ ஜெகத்குரு

சங்கர பகவத் பாதாசார்ய
சரித்ரம்.

இஃது

காஞ்சிபுரம் மண்டனமேசுவரபரம்பராகதரான

சேஷையர் குமாரர்

சுப்ரம்மண்ய அய்யரால்

இந்துஸ்தானி பாஷையிலிருந்து தமிழில்

எழுதப்பட்டதை

பச்சையப்பன்ஹைஸ்கூல் ஸமஸ்க்ருதபண்டிதர்

பிரம்மஸ்ரீ

இராமனுத சாஸ்திரியாரவர்களாலும்,

மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ

நரஸிம்மாசார்யர் அவர்களாலும்,

பரிசோதிக்கப்பட்டு

காஞ்சிபுரம் உதாஸி மடம் மஹந்து

நாராயணதாஸ் பாவாஜி அவர்களிட

த்ரவ்ய ஸகாயத்தால்,

காஞ்சிபுரம்

...ராயல் அச்சுக்கூடத்தில்

...க்கப்பட்டது.

...5—19.

Q23:4198W
M19
125436

உ

ஓம் குருப்யோநம:

ஸ்ரீ ஜெகத்குரு

சங்கர பகவத் பாதாசார்ய

சரித்ரம்.

இஃது

காஞ்சிபுரம் மண்டனமேசுவரபரப்பராகதரான

சேஷையர் குமாரர்

சுப்ரம்மண்ய அய்யரால்

இந்துஸ்தானி பாஷையிலிருந்து தமிழில்

எழுதப்பட்டதை

பச்சையப்பன்ஹைஸ்கூல் ஸமஸ்க்ருதபண்டிதர்

பிரம்மஸ்ரீ

இராமனாத சாஸ்திரியாரவர்களாலும்,

மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ

நரஸிம்மாசார்யர் அவர்களாலும்,

பரிசோதிக்கப்பட்டு

காஞ்சிபுரம் உதாஸி மடம் மஹந்து

நாராயணதாஸ் பாவாஜி அவர்களிட

த்ரவ்ய ஸகாயத்தால்,

காஞ்சிபுரம்

விக்டோரியா ரசயல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

2—5—19.

பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தி வாசிக்க
6	13	பக்திலிங்கம்	முக்திலிங்கம்
8	6	அனுபவமில்த்தால்	அனுபவமில்லாத்தால்
8	8	பிரவீணதை	ப்ரவீணதை
	23	அக்ஷத்ரத்தில்	அக்ஷேத்திரத்தில்
	24	உயிர்த்தெழுப்பி த்ப்பி	உயிர்த்தெழுப்பி விட்டு
	26	விக்ஷக்ஷண்யம்	வீக்ஷண்யம்
10	18	யோகலிங்கம்	போகலிங்கம்
	22	ப்ரிதிவீதவாசாய	ப்ரதிவீதவாசார்ய
11	13	தெரிசித்து-ஆகாசயந்த்ரோத்தாரணம்	தெரிசித்து மோக்ஷலிங்கத்தை ஸ்தாபித்து ஆகாசயந்த்ரோத்தாரணம்
14	20	த்ரோடகா	தோடகா
16	1	கிராமங்ளும்	கிராமங்களும்
19	20	மஹாநதி	மஹோததி
20	21	துக்கசிர்ஹேது	துக்கஹேது

உ

ஸ்ரீ குருப்யோ நம:.

ஸ்ரீமத்ஜெகத் குரு சங்கரபகவத் பாதாசார்ய சரித்திரம்.

[illegible]

சுவஸ்திஸ்ரீமத் பரமதயாளுவாகிய பரமேஸ்வரர் கலியுகாதி 2000-வருஷத்தளவில்கலிபலத்தினால உலகத்தில் வைதிக தர்மமார்க்கங்கள் க்ஷீணித்து ஜைன பௌத்தாதி துர்மதங்கள் அபிவிர்த்தியாகி ஸ்வதர்ம ஹீனர்களான ஆத்மகோடிகள் உஜ்ஜீவிக்குமாறு திருவுளம்பற்றி தனக்குச்சகாயார்த்தமாக விரிஞ்சிகுமாராதி தேவதைகளை பிருதிவியில் அவதரிக்கும்படி ஆக்யாபித்துத் தாம் கேரளதேசத்தில் காலடி கிராமநிவாஸஸ்தராகிய ஸிவபக்தியிற் சிறந்தஸிவகுரு என்கிற ப்ராமணர் புத்ரபாக்யத்தை உத்தேஸித்துப் புரிந்த தபஸ்ஸுக்கிரங்கி உன்க்ரஹத்தில் புத்ரனாக அவதரிப்பேன் என்று முன்கொடுத்த வரத்தைப் பூர்த்திசெய்யவும், ஸிவபக்த சிரோன்மணியாகிய ஸிவ

குரு ப்ராமணருடைய தர்ம பத்னியாகிய ஆர்யாம்பாளிட கெர்பத்திலிருந்து கலியுகாதி 2592-வது நந்தனநாம ஸம்வத்ஸரம் வைஶாக சுத்தபஞ்சமி புனர்வஸு நக்ஷத்ரம் தனுர்லக்னம்கூடியஇந்த ஶுபமுகூர்த்தத்திலவதரித்தார். பிதாவாகிய ஶிவகுரு கேவலஈஶ்வராம்ஶமாகிய இந்தஶிஶுவுக்கு ஸ்ரீஶங்கரானுக்ருஹத்தால் ஜெனித்தபடியால் ஶங்கரரென்று நாமகரணம் செய்து மூன்றாவது வயதில் ஶௌளாதி ஸம்ஸ்காரங்களைச் செய்து பாலக்ரீடானந்தங்களை அனுபவித்து ஸ்வர்க்கஸ்தரானார்.

ஶங்கரர் ஸகலபாஷைகளிலும் நிபுணராய் 5-வது வயதில் உபநயன முகூர்த்தமும் நடக்கப்பெற்று 2-வருஷத்திற்குள் குருகுல வாஸத்திராஸயசெய்து சகல வேதஶாஸ்திர பாரங்கதராய் 8-ம் வயதாரம்பத்தில் துர்யாஶ்ரமத்தை அடைய ஆஸக்தராய் தாயாரிடம்சென்று ஆஶ்ரமத்தை ஸ்வீகரிக்க அனுமதி கொடுக்கும்படி பிரார்த்தித்தார். லோகானுரீதியாக துர்யாஶ்ரமத்திற்கு முன் கிரஹஸ்தாஶ்ரமத்தில் அனுபவம் வேணுமெனகிற ஹேதுவினால் அனுமதி கொடுக்கவில்லை.

ஶங்கரர் தாயாருடைய அனுமதியையும் தூர்வாஸரிஷியினுடைய ஶாபத்தால் முதலையாக ஜென்மித்திருக்கும் ஹாஹர் யென்கிற நாமதேயத்தையுடைய கந்தர்வன் முதலை ஜென்மத்தினின்று விமுக்தனாக வேணுமென்பதையும் முன்னிட்டு தன் தாயாருடன் சூர்ணீநதிக்குச்சென்று ஸ்நானம்செய்துகொண்

டிருக்கையில்ஸங்கருடைய பாதங்களை முதலை பிடித்திழுக்கத் தொடங்கியது, அப்பொழுது இம்மஹான் என் காலை முதலை பிடித்திழுக்கின்றது. ஆகையால் துர்யாஶ்ரமத்தை அடைய ஆக்ஞை தந்தால் விட்டுவிடும் இல்லாவிடில்நதியில் மூழ்கிப்போவேன் என்று தாயாருக்குத் தெரிவிக்க மாதாவாகிய ஆர்யாம்பாள் மஹத்தான துயரத்தை அடைந்தவளாய்ஸங்கருடையஸங்கடநிவாரணத்தை,உத்தேசித்து ஆஶ்ரமத்தையடைய அனுமதிகொடுத்தாள் மகரமும் இம்மஹானிட காலை விட்டு ஸ்வஸரீரத்தைஅடைந்தது. இம்மஹானும்ஆஶ்வீஜ ஸுத்தபௌர்ணமி அஶ்வனி நக்ஷத்திரம் அபிஜித் முகூர்த்தத்தில் மாநஸீகமாய் துர்யாஶ்ரம மந்திரத்தை உச்சரித்த உடன் யதீஸ்வரச் சின்னங்களோடு பரமஸிவாம்ஸ பூதராய் நதியிலிருந்து எழுந்தருளினர், எதீந்திரரான ஸங்கரர் தாயாரை பிரதக்ஷிணம் செய்துநமஸ்கரித்து ஸன்யாஸ விதிப்படி குருஸேவை செய்து தேஸாடனம்செய்ய வேணுமென்கிற தம் அபிப்ராயத்தை வெளியிட்டார். அரிய தவப்புதல்வரான ஸங்கருடையவசனத்தை அடைதர்க்கரிதாகிய புத்ர பாக்யத்தை அடைந்த ஆர்யாம்பாள் கேட்டு ஸஹித்தற்கரிதாகிய மஹத்தான புத்ர ஸோகத்தில்ஆழ்ந்து பிராணப் பிரயாண ஸமயத்தை எதிர்பார்த்து நிற்கும் தாயாரை நோக்கி ஸிலஸாந்தி வசனங்களை போதித்து நீ எந்தஸமயத்தில் என்னை ஸ்மரிக்கிரீரோ அச்சமயத்தில் பிராப்தமாய் உன் அபீஷ்டங்களைபூர்திசெய்வேன் என்று வாக்களித்து தாயாரிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு ஸ்ரீ நர்மதாநதிக்கரையில் தபஸ்

செய்துக்கொண்டிருக்கும்கோவிந்த பகவத்பாதாசார் யரிட ஸமீபத்தைச் சேர்ந்து ஆத்மபோத பிரகட னம்செய்து அவரால் ஸரஸ்வதி சாம்ப்ரதாயப்படி மஹாவாக்யோபதேசம் பெற்று ப்ரிதுகாலம் குரு ஸன்னிதானத்தில்ஆத்மவிசாரம்செய்துக்கொண்டிருந் தார். அப்போது நர்மதா நதியில் வந்த பூர்ணபிர வாஹத்தால் அவ்விடமிருந்த ஜனங்கள் அதிக துன் பத்தை அடைந்து ஆசார்யாளுடையஶரணாகதரானர் கள். ஜீவகாருண்ய மூர்த்தியாகிய ஆசார்ய ஸ்வாமி கள் தம்யோக பலத்தினால் அந்த முழுப்ரவாஹத்தை யும் தம்ம்ருத்கெடத்தில் நிரப்பிக்கொண்டு சரணகெ த ஜனங்களை ரக்ஷித்தார் பிறகு குருவினிட உத்திரவு பெற்றுக்கொண்டு ஸ்ரீவாராணஸி,க்ஷேத்ரத்தை அடை ந்தார். அவ்விடத்தில்ஸ்ரீ விஶ்வேஶ்வரர் சண்டாளரூப மாகவந்து ஸ்வாமிகளைபரிக்ஷித்து பிறகுநிஜரூப தரிஶ னம் தந்து பாஷ்யத்திரயங்களை ரசனம் செய்யும்படி ஆக்யாபித்து அந்தப்படி ஆசார்யாள் பாஷ்யத்திரயங் களையும் அனேகமான வேதாந்தகிரந்தங்களையும் பக்தி ரஸமான கிரந்தங்களையும் ஆன்மகோடிகள் உஜ்ஜீ விக்கும்படி அருளிச்செய்து அக்க்ரந்தங்கள் உலக மெங்கும் ப்ரஜ்வலித்து வருகின்றன. அச்சமயத்தில் தக்ஷிணதேஶத்திலிருந்துஉலகஸௌகங்களை வெறுத்து ஆசார்யனைத்தேடிவரும் ஸனந்தனன் என்கிற பிராம ணர் நமதாசார்ய ஸ்வாமிகளிட பிரதாபத்தைக் கே ட்டுஸன்னிதானத்தில்வந்து ஶரணாகதி அடைந்தவரை ஸ்வாமிகள்பார்த்து ஆதரித்து ஸன்யாஸம்கொடுத்து சிஷ்யராக்கிக்கொண்டார் ஒருநாள்கங்காநதியின் அக் கரையிலிருந்த ஸனந்தனரைநோக்கி தன்னிடம் வரும்

படி ஆக்யாபிக்க அந்த ஆக்ஞையை சேட்டமாசதிரத்தில் குருவாக்யத்திலுள்ள த்ருடபக்தியினுல் அதி தீவிரமாய் கங்கையில் குதித்துவிட்டார்.

இவரிட குருபக்தி விசேஷத்திற்கு மகிழ்ந்த கங்காபவானி ஸநந்தனருடைய பாதங்களுக்காதாரமாக தாமரை மலரை உண்டாக்கினுள். அந்த மலரின் ஆதாரத்தைக்கொண்டு நதியைக்கடந்துஶங்கரருடைய ஸன்னிதானத்தில் சேர்ந்தார். இவருடைய பக்திக்கிரங்கி இவருக்கு பத்மபாதரென்று பெயர் கொடுத்தார். இப்படிக்கிருக்க அப்ஸரர்கள்கைலாஸத்திற்குச் செல்லும் சமயத்தில் ஆசார்யாள்ஸப்தகோடி மஹாமந்திர உபாஸனுபலத்தினுல் கந்தர்வர்களை தன் வஶமாக்கி அவர்களுடைய ஸகாயத்தினுல் கஹன மார்க்கமாய் கைலாயத்திற்குச்சென்று சிவ கணங்களால் சூழப்பட்டு உமாதேவி சமேதராய் வீற்றிருக்கும் கைலாஸபதியை தரிசித்து, அகண்டானந்தைகஸ்வரூபமாய் நிற்கும் ஆசார்யாளை சந்திரஜடாதரக்கடவுள் நோக்கி ஜ௫௦ ரூதஸ்வ௦ ஜாஜோஸி நீ என்னுடைய அம்சமென்றே அரிவாயாக எவ்வளவும் சந்தேஹமில்லை என்று திருவாய் மலர்ந்தருளிச்செய்து, யோகலிங்கம், போகலிங்கம், வரலிங்கம், முக்திலிங்கம், மோக்ஷலிங்கம், இந்தபஞ்ச ஸ்படிகலிங்கங்களையும் ஸௌந்தர்யலஹரி என்கிற மந்திர சாரஸ்துதியையும் கொடுத்தருள ஸ்ரீ ஶங்கரபகவத் பாதாசார்யாள் அவைகளை ஸ்வீகரித்து விடைபெற்று பூஉலகத்திற்கு திரும்பிவரும் மார்க்கத்தில் நேபால் தேஶத்தை சந்தித்தார் அவ்விடத்தில் ஸ்ரீ பஶுபதேஸ்வர ஸ்வாமியை தரிசித்து அங்கருக்

காசனாகிய விருஷதேவ வர்மனென்கிற அரசனால் பூஜிக்கப்பெற்று அவ்வரசனுடைய பக்திக்கிரங்கி அத்வைத உபதேசம் செய்து அனுக்கிரஹித்து ஶிஷ்யராக்கிக்கொண்டு அவ்வரசனுக் குஸந்தானமில்லாதிருந்து ஸ்ரீஸ்வாமிகளிட கடாக்ஷத்தால் பிரந்த புத்திரனுக்கு ஶங்கரனென்று நாமகரணம்செய்து அவ்வரசனுடைய ஶிவபக்திக்குச் சந்தோஷித்து அந்த க்ஷேத்திரத்தில் வரலிங்க சந்திர மௌளீஶ்வரரை ஸ்தாபித்து அவ்வரசனுக்கு சத்துருபாதரர்ஹிதமாய் அகண்டயாய் ராஜ்யம் செழித்திருக்குக என்று ஆஶீர்வதித்து அவ்விடமிருந்து பத்ரிகாஶிரமத்தைச் சேர்ந்தார்.

அங்கு ஸ்ரீ விஷ்ணுபகவானை தரிஶித்து ஜோதிஷ்மதி என்னும மடத்தை நிர்மாணம்செய்து அதில்பக்தி லிங்க சந்திர மௌளீஶ்வர ஸ்வாமியை ஸ்தாபித்து அவ்விடத்திலிருக்கும் குண்டத்திலுள்ள தீர்த்தத்தையும் ஸதா உஷ்ணமாகவே இருக்கும்படி கடாக்ஷித்து புரப்பட்டுவரும் மார்கத்தில் ஆங்காங்கு அத்வைத உபதேஶம்செய்துக்கொண்டே (அலஹாபாத்) பிரயாகையில் விஜயம்செய்தார்.

அப்புண்ய பூமியில்ஸ்கந்தாவதாரமாகிய குமாரிலப்பட்ட பாதாசார்யாள் கர்மமார்க்க ஜீர்ணோத்தாரணம் செய்ததில் தான் புத்தகுரு நிந்தா தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதாய் தன் ஶரீரத்தை நெல் உமியால் தஹித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் தரிசனம்தந்து அவருடைய வேண்டுகோளின்படி காஷ்மீர்தேஶத்தில் மாஹிஷ்மதிநகர

த்தில்வஸிக்கும், உலகத்தில் கர்மமார்க்கத்தை அனுஷ்டி-
த்துக் காட்ட அவதரித்த பிர்ம்மாவதாரமாகிய மண்
டனமீஸ்வரருக்கு தரிஸனம் தந்து அடியில்கண்ட
இரண்டு நிபந்தனைகளின்பேரில் ஸாஸ்த்ரவாதம் செய்
யத்தொடங்கினார்கள் நிபந்தனைகளாவன

175436

(1) கர்மமார்க்கம் கண்டனமாகும் பக்ஷத்தில் மண்டனமீஸ்வரர்ஸன்யாஸம் பூண்டு ஆசார்யாளுக்கு ஸிஷ்யராக வேணுமென்றும்

(2) அத்வைதமார்கம் கண்டனமாகும் பக்ஷத்தில் ஸ்ரீஸங்கராசார்யாள் கிருஹஸ்தாஸ்ரமம் பூண்டு மண்டனமீஸ்வரருக்கு சிஷ்யராகவேண்டுமென்றும் ஆசார்யசுவாமிகள்கர்மமார்க்கத்தைகண்டனம்செய்து விட்டார். நிபந்தனைப்படி மண்டனமிஸ்வரரும்துர்யாஸ்ரமத்தை வஹித்து ஸ்வாமிகளால்ஸுரேஸ்வராசார்யரென்கிற திருநாமம்பெற்று ஆசார்யாளுக்கு முக்ய ஸிஷ்யராக விளங்கினார்.

ஸரஸ்வதி அவதாரமாகிய மண்டனமிஸ்வரருடைய தர்மபத்னியாகியஸரஸவாணி பிரம்மலோகத்திற்சேக பிரயத்னப்பட்டாள் அச்சமயத்தில்நமதாசார்யஸ்வாமிகள் வனதுர்க்கா மந்திரஸக்தியால் மேற்செல்லவொட்டாமல் தடுத்து விட்டாராகையால் அதிகோபாவேசத்துடன் அந்தரத்தில் தங்கிவிட்ட ஸரஸவாணியும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளும் தம்மிருவரில் வாதத்தில் யார் யாரை ஜெயிக்கிறார்களோ அவரிட ஆக்ஞைக்குட்பட்டு அபஜெயத்தை அடைந்தவர்கள் நடந்துக் கொள்ள வேணுமென்கிற நிபந்தனையின்பேரில்வாதம்

செய்யத்தொடங்கி வாதத்தில் 63 கலைகளிலும் ஆசார்ய ஸ்வாமிகள் ஜெயித்து விட்டார் 64 வதுகலை காமசாஸ்த்ர சம்மந்தமாகையால் இதில் கேவலம் பிர்மசர்யாஸ்ரமத்திலிருந்து துர்யாஸ்ரமத்தை அடைந்த நமதாசார்ய ஸ்வாமிகளுக்கெவ்வளவும் அனுபவமில்லாத்தால் ஸரஸவாணி இடத்தில் 3 மாதாகாலதவணை பெற்று பரகாய பிரவேஸினி வித்யா ஸாமர்த்தியத்தினால் காமசாஸ்திரத்திலும் பிரவீணதை யடைந்து ஜெயித்து விட்டார் ஆகையால் ஸரஸவாணியும் ஏர்ப்பட்டிருக்கும் நிபந்தனையின்படி ஆசார்யருடன் பின் தொடந்தாள்.

ஆசார்யாள் அவ்விடமிருந்து புரப்பட்டு வரும் மார்கத்தில் ஒருகாபாலிக மதாபிமானி ஆசார்யருடையஸிரஸை கேழ்க்க பரமகிருபா மூர்த்தியாகிய ஆசார்ய ஸ்வாமிகள் சிரஸை எடுத்துக்கொள்ளும்படி வாக்களித்தார். அந்தப்படி ஸிரஸைஎடுத்துக்கொள்ள பிரயத்னப்படுவதை வார்தாக்யான திருஷ்டியால் அரிந்த பத்மபாதாசார்ய ஸ்வாமிகள் நரஸிம்மமாக ரூபீகரித்து காபாலிகமதாபிமானியை இரண்டாகப் பிளந்தெரிந்தார். அவ்விடமிருந்து ஸ்ரீமதாசார்யஸ்வாமிகள் ஆன்மகோடிகளுக்கு அத்வைத உபதேஸம் செய்துக்கொண்டு, ஸ்ரீ கோகர்ண க்ஷேத்ரத்திற்கு விஜயம் செய்தார். அக்ஷேத்ரத்தில் இரந்துக்கிடந்த ஒருவாலிபனை உயிர்த்தெழுப்பித்ப்பிவிட்டு வல்லி அக்ரஹாரத்தில் ஒருமூகன் ஆசார்யருடையகடாக்ஷ விக்ஷக்ஷண்யத்தால் மூகத்தன்மையைவிட்டு வேதாந்தகதனம் செய்யத்தொடங்கிய அவருக்கு ஸன்யாசம்

செய்வித்து அஸ்தாமலகர் என்று நாமதேயமளித்து தமது ஶிஷ்யராக்கிக்கொண்டு அவ்வவ்விடங்களிலுள்ள துர்மதங்களைக் கண்டித்து அத்வைத ஸித்தாந்தம் செய்துக்கொண்டு விபண்டகவனமாகிய துங்கபத்ரா நதிதீரத்தில் ஶ்ருங்ககிரியைச் சேர்ந்தார்.

அவ்விடத்தில் ஸரஸ்வதியினுடைய சில அம்ஶங்களை ஸ்தாபித்து ஸரஸ்வதியை ப்ரஹ்மலோகத்திற்குச் செல்லும்படி ஆக்யாபித்தார். பத்மபாதாசார்யர் ஸ்வாமிகளிட அனுமதிபெற்று ஸ்ரீ ராமேஶ்வரத்திற்கு வரும் மார்க்கத்தில் பஞ்சபாதிகாக்ரந்தமானது அக்னியினால் நாஶத்தை அடைந்தமையால் மேல் செல்ல மனமில்லாதவராய் திரும்பி ஶ்ருங்ககிரியில் ஸ்ரீ ஶங்கராசார்ய ஸன்னிதானத்தை அடைந்து பஞ்சபாதிகா க்ரந்தம் அக்னி தக்தமானதை தெரிவிக்க ஸ்வாமிகள் தாம் முன் ஒரு காலத்தில் ஶ்ரவணம் செய்திருந்தமையால் அந்தப்படி க்ரந்தத்தை செய்துக்கொடுத்து அந்த க்ரந்தமானது அத்யாபியுலகத்தில் ப்ரஸித்தமாய் இருக்கிறது. அச்சமயத்தில் தாயாராகிய ஆர்யாம்பாள் தன் நிர்யாண காலம் ஸமீபித்திருப்பதை அரிந்து புத்ரரை ஸ்மரித்தாள் அதையறிந்த ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் தக்ஷணமே தாயாரிடம் சென்று தாயாரின் அபீஷ்டங்களைப் பூர்த்திசெய்தார். புண்யவதியான ஆர்யாம்பாள் தேஹாந்தப்ராப்தியானாள் ஆசார்யாள் தன் தாயாரின் தகன க்ரியைகளை நடத்துவதின் பொருட்டு தம் பூர்வாஶ்ரம கோத்திரஜாக்களின் ஸகாயத்தைக் கோரி அழைக்க அவர்கள்யாவரும் உதவி செய்யாமல் திக்கரி

த்து நீர் எட்டாம் வயதில் துர்யாஶ்ரமத்தை அடைந் தது அஶாஸ்திரீயமாகையால் ப்ரஷ்டராய் விட்டீர் உம்மைபஹிஷ்க்காரம்செய்திருக்கிற தென்றுஉரைத் தார்கள். ஸ்ரீ ஆசார்யாள் வைராக்யதசைக்கோர் ஆட ங்கமுமில்லை என்று நீதிவசனங்களைக் கூறியும்கேளாத துராஹங்காரிகளை ஸ்ரீ ஆசார்யாள் நீங்கள் ஶவத்தை உங்கள் நிவேசனத்திலேயே தஹனம் செய்யக்கட வீர்களென்றும் ஒருவருக்கொருவர் சமீபித்திராமல் தூரத்தில் வசிக்கக்கடவீர்களென்றும் இந்தஆக்ஞைப் படி நடக்கத்தவறினல் நாஶத்தை அடைவீர்களெ ன்று ஶபித்தார் அந்த ஶாபத்தைக் கேட்டமாதுல வம்ஶத்தார் ஸ்வாமிகளை க்ஷமாபணம் கேட்டுக் கொண்டார்கள் ஸ்ரீ ஆசார்யர் தாயாரின் ஶரீரத்தை துண்டு துண்டுகளாகச்செய்து தஹனம் செய்தார் இது முதல் இந்த காலடி கிராமத்திற்கு யாதொரு ஸன்யாசிகளும் வரக்கூடாதென்றுரைத்து அவ்விட மிருந்துஶ்ருங்ககிரியைச்சேர்ந்தார் அவ்விடத்தில்ஒரு மடாலயம் கட்டுவித்து அதில் யோகலிங்க நாம சந் திர மௌளீஸ்வர ஸ்வாமியை ஸ்தாபித்து சுவாமியை ஆராதனைசெய்யவும் ஆத்மகோடிகளுக்கு அத்வைத உபதேஶம் செய்வதற்கும் தம் ஶிஷ்யரான ப்ரிதிவீதவாசாயஸ்வாமிகளைமடாதிஶராகநியமித்தார் அங்கிருந்துபுறப்பட்டுவரும் மார்க்கத்தில் ஜனங்களு க்கு ஞானமார்கத்தை உபதேசம் செய்துக்கொண்டு த்வாரகா நகரத்தைச் சேர்ந்தார் அக்ஷேத்ரத் தில் காளிகா பீடத்தை ஸ்தாபித்து பத்மபாதாசார் யரை மடாதிஶராக நியமித்து ஜனங்களுக்கு தர்மத் தை உபதேசித்துவரும்படி ஆக்ஞை செய்து தாம்

அவ்விடம்விட்டு ஆத்தும கோடிகள் ஜனன மரணாதி துக்கஸாகரத்தினின்று கரை ஏறுவதர்க்குரிய க்ஞான மார்கங்களை போதித்து அனேகஉக்ரதேவதைகளின் தேஜஸை சாந்தப்படித்தி ஸ்ரீஜகன்னாதபுரியைச்சேர்ந் தார் அந்தஸ்தளத்தில் கோவர்தன மடத்தை ஸ்தா பித்து அதில் விமலாதேவியை ப்ரதிஷ்டைசெய்து ஆ ராதனைக்கும் தத்வோபதேஸம் செய்வதர்க்கும் அஸ்தாமலகாசார்யரைபீடாதிஸராகச்செய்து சென் னைக்கெழுந்தருளினர் அங்கு சண்டி நாமதேவியின் உக்ரதேஜஸை ஆகரிஷித்து ஜீவகோடிகளை நிர்பயஸ் தர்களாகச்செய்து க்யானமார்க்கத்தை போதித்து ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்தார். அந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ நடராஜரை தெரிசித்து ஆகா ஸயந்த்ரோத்தாரணம் செய்து அக்ஷேத்திர வாஸிக ளான 3000வித்வத்ப்ரம்மமண்டலிகளின்ஸ்வாதீனம் செய்து ஸேஷாசல பர்வதத்திற் கெழுந்தருளினர் அவ்விடத்தில் ஸ்ரீ ஸுப்ரமண்யர் ஸ்ரீ வெங்கடேஸ் வரர் இந்த இரண்டு சன்னதிக்கு மத்தியில் ஜனதனா கர்ஷண யந்திரஸ்தாபனம்செய்து ஸ்ரீ இராமேஸ்வரத் திற்குச்சென்று ஸேது ஸ்னானம்செய்து ஸ்ரீ இராம நாத ஸ்வாமி தரிசனம் செய்துக்கொண்டு கன்யாகும ரிக்கேகி அவ்விடத்தில் ப்ரசவித வீரவைஷ்ணவமத கண்டனமும் அத்வைத ஸ்தாபனமும்செய்து அவ் விடமிருந்து புறப்பட்டு ஆங்காங்கு வேதாந்த மார்க் த்தை உபதேஸித்துக்கொண்டுஜெம்புகேஸ்வரத்தை சேர்ந்தார் அவ்விடத்தில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியை தர்ஸிக்க அம்பாள் மிகுந்த உக்ரதேஜஸுடன் விள ங்குவதை கண்டு அவ்வுக்ர தேஜஸையும், அத்

தேஜஸால் அம்பாளை தர்ஶிக்கவருந்தும் ஜனங்களுடைய தாபத்தையும், நிவர்த்திக்க திரு உள்ளங்கொண்டு, மஹாதேவியினுடைய புதல்வரான கெஜானனமூர்த்தியைவிதிப்படி அம்பாளுக்கெதிர்முகமாகப்ரதிஷ்டை செய்தார் அம்பாள் புத்ரவாத்ஸல்யத்தால் தன் திருஷ்டியை விநாயகப் பெருமான் மீதுபடாமல் அதோ திருஷ்டியாக்கிக்கொண்டாள். பிரகு திருஷ்டி உயர்த்தப்படவில்லை அம்மனுடைய கர்ணாபரணத்தில் ஸ்ரீ சக்ரராஜயந்த்ரோத்தாரணம் செய்தார். இப்படிப்பட்ட அதியத்புதமான செய்கைகளையும் பராக்ரமத்தையும் பார்த்த திருஶிரபுரத்தரசர் ஸ்வாமியை நமஸ்கரித்து ஶோடசோபசாரங்களைசெய்து ஒருமடம் கட்டுவித்து வேண்டிய வருமானங்களை யேர்ப்படுத்தி இருக்கிறார் அந்தப்படி நாளது வரையில் நடந்து வருகிறது

அவ்விடம் விட்டுபுறப்பட்டு ஸத்யவ்ருத ப்ரளயஜித காஞ்சீ க்ஷேத்திரத்தை அடைந்தார். அந்தபுண்ய பூமியில் ருத்ரகோடியாகம் ஸ்ரீயேகாம்ரேஸ்வர க்ஷேத்ரம் புண்யகோடியாகம் ஸ்ரீ !வரதராஜக்ஷேத்ரம் இவ்விரண்டு ஸ்தளத்திர்க்கு மத்தியில் மூலாதார க்ஷேத்ரமாகிய காமகோஷ்டதாரதல குஹத்வாரத்தில்பத்மாஸனாரூடமாக சுப்ர ஸன்னமாயிருக்கும் ஸாக்ஷாத் ராஜராஜேஶ்வரியை தர்சிக்க குஹத்துவாரத்தில் ப்ரவேசிக்குமளவில் அவ்விடமெழுந்தருளி இருக்கும் ஸரஸ்வதி, முன்ஸரஸவாணி அவதாரத்தில் தன்னை ஜெயித்தவரென்றறிந்து இடம்குடுக்கஆசார்யஸ்வாமிகள் குஹத்துவாரத்தில் ப்ரவேஶம் செய்தார் அவ்விடத்தில்கேவலம் விராட்ரூபியாகிய பராஶக்தியினுடைய

மர்மஸ்தானமாய் விளங்குவதை ஆசார்யாள் தரிசித்து அந்த ஸ்வர்ண மேருவை பிரதக்ஷணம்செய்து ஆவரண தேவதாஸஹிதமாய் செய்த ஸ்துதிக்கு ப்ரசன்னமாகிய பராசக்தியினுடைய அத்யுக்ரதேஜஸை ஆகர்ஷித்துக்கொண்டு பஹித்துவாரத்திற்கு வந்து தேவியினுடைய உக்ரசாந்தியர்த்தமாக பூப்ரஸ்தாரரீதியாய் கண்டகசிலேயில் ஸ்ரீ சக்ரோத்தாரணம்செய்துஸௌந்தர்யலஹரியென்னும் மந்த்ர ஸாராஹுரீதியாய் பகவதியைஸ்துதித்துதேவியின் 16 கலேகளில்சிலகலேகளே அங்குஸ்தாபித்து மற்றகலேகளே ஆத்மபூஜனர்த்தமாக்கிக்கொண்டார்பூர்வத்திலிருந்து இம்மஹாதேவிக்கு தாந்த்ரீக ரீதியாக நடந்துவரும் பூஜைகளே இது முதல் வைதிகமார்க ரீதியாக நடத்தும்படி ஆக்யாபித்து அந்தப்படி இப்பொழுதும் நடந்தேரிவருகிறது. இச்சமயத்தில் ஸ்ரீதத்தாத்ரேய மஹாமுனிவர் ஸ்ரீமதாசார்யாளுடைய பராக்கிரமத்தையும்லோகோபகாரமான அத்யுன்னதசெய்கைகளேயும் கண்டு அத்யானந்தத்துடன் அனுக்ரஹிக்கும் பொருட்டு அவ்விடம் ப்ராப்தமாய் பாஷண்டமதகண்டனம்செய்து அத்வைதமதத்தை நிலேநிருத்தி சரஸ்வதி அம்சமாகியஸரஸவாணியையும் ஜெயித்து கீர்த்தியும் யஸஸ்ஸும் உலகமெங்கும் வியாபிக்கச் செய்த தர்மாதிகாரியாகிய உனக்கு ஸ்ரீமத்ஜெகத்குரு என்றுப்ரஸித்தியாக இருக்கக்கடவதென்று ஆஸீர்வதித்தார். ஸ்ரீமத்ஜெகத்குரு சங்கரபகவத்பாதாசார்யாள் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் ஸன்னதியில் ஸர்வக்ய பீடத்திலாரோகணிக்க எத்தனித்தார். அப்பொழுது ஸரஸ்வதி ஆகாஸவாணியாக

ஸகலவித்வான்களையும் ஜெயித்தபிறகு ஸர்வக்யபீடத்தில்ஆரோஹணிப்பாயாக என்கிறஶப்தத்தைகேட்டு சிறிது நேரம் யோசித்துநிற்க, இவ்வளவில் தாம்பர பரணிதீர நிவாஸஸ்தர்களான பேதமதவாத ஸமூகங்கள் வந்தன. அவர்களை வாதத்தில் ஜெயித்து அத்வைத மதஸ்தர்களாக செய்தார். பிறகுஸர்வக்யபீடாரோஹண ஸமாரம்பமாயிற்று. அச்சமயத்தில் தத்தாத்ரேயாதிமுனிவர்களும் ரிஷிமண்டலிகளும் வித்வத் பிர்ம்ம சமூஹங்களும் சோளதேசாதிபதியாகிய ராஜஸேன மஹாராஜனும் மற்றுள்ளவர்களும் ஸர்வக்ஞ பீடாரோஹண ஸேவயை எதிர்பார்த்து நின்றூர்கள்.

இந்த அமானுஷகிருத்யரான ஆசார்யஸ்வாமிகளுக்கு ராஜஸேன மஹாராஜன் ஸன்மானார்த்தமாக ஆந்தோளிகா-ஶ்வேதசத்ர ஸ்வர்ணசாமர நவரத்ன கெட ரத்னஜடிதபாதுகாதி பிருதுகளை அர்ப்பணம் செய்து இருகரங்களையும் சிரமேற்கூப்பிக் கொண்டு தன்னுடையமந்திரி பிரதானிமுதலியஸமூகங்களுடன் ஆனந்த பரிதர்களாய்நின்றூர்கள். அஸ்தாமலகபத்மபாதத்ரோடகாசார்யாதி சிஷ்யஸமூகங்கள் சத்ரசாமர மகரதோரண மயூரபுச்ச ஸ்வர்ணவேத்ர தண்டவகைராக்களை எடுத்துக்கொண்டு நின்றூர்கள். சிலர்ஸ்வர்ணதீபங்களை எடுத்துக்கொண்டுநின்றூர்கள். சிலர்தாடங்கம், பங்கம்-படுபடா, பேரிகாஹளம்பாங்கா, கடக, வீணா, வேணுமிருதங்காதிவாத்யகோஷம் செய்தார்கள். சிலர்ஸ்வாமியைஸ்துதித்து நின்றூர்கள் இப்படிப்பட்டமஹதாநந்த ஸமயத்தில்ஸ்ரீ ஜெகத்குரு ஶங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் தமது சிஷ்ய

ரான பத்மபாதாசார்யாளிடம் கைலாகுகொண்டு ஸர்வக்யபீடத்தில் ஆரோஹணித்து ஸுகாஸோபிதரானார் அச்சமயத்தில் ஸகலமானவர்களும் மெய்மறந்தவர்களாய்ஆநந்தபாஷ்பத்துடன்,

(1) ஜெயகோவிந்த பகவத் பாதபாதாப்ஜஷட்பதா
(2) ஜெயஜீவ பராபேதவாவதூக ஜெகத்குரோ
(3) ஜெயபோ பௌத்தபாஷண்ட வித்வம்ஸனவிசக்ஷணா.
(4) ஜெயவேதாந்த சித்தாந்த வித்தாஞ்ஜனமஹாமதே
(5) ஸ்ரீகாஞ்சீபுராபரண காமதகாமகோடி பீடாபிஷிக்த வரதேசிக ஸார்வபௌமா

(6) சர்வக்ய சக்தியதிகதாகில-மந்திரதந்திர சக்ரபிரதிஷ்டித- விஜ்ரிம்பித சாதுரீகா. என்று உத்கோஷித்தார்கள். ஸ்வாமிகளை ஸகலமானவர்களும் சாஷ்டாங்க பிரணாமம் செய்தார்கள் ஸர்வக்ய பீடாரோஹண மஹோத்ஸவத்தைக்கண்டு தேவதைகள் ஆநந்தித்து புஷ்பவருஷம்வருஷித்தனர் துந்துபி முழங்கிற்று அப்ஸரர்கள் நர்த்தனம் செய்தனர். அதிப்பிரஸன்னரான ஆசார்யாளை ஆசீர்வதித்து ஸ்ரீ தத்தாத்திரேயாதி மஹாமுனீஸ்வரர்கள் தம் ஆஸ்ரமத்தைஅடைந்தார்கள். பிரகுராஜஸேன மஹாராஜன் ஆசார்யாளுடைய ஆக்ஞையின்படி அக்ரஹார பிரதிஷ்டைசெய்து ருத்திரகோடி காமகோடி புண்யகோடி இம்மூன்று ஸதலங்களையும் ஏழுகோபுர ஸஹிதமாய் ஆலய ஜீர்ணோத்தாரணம் செய்விக்க ...

175436

ரும் விடப்பட்டன மடாலயமொன்று கட்டி அதில் சிஷ்ய கோடிகளுக்கு தத்வோபதேசம்செய்யபிராரம் பிக்கப்பட்டது. பிறகு ஆசார்யஸ்வாமிகள் தம்முக்ய சிஷ்யரான ஸுரேஸ்வராசார்யரை, சிருங்ககிரிக்குப் போய் வியாக்யானபீட நிர்மாணம்செய்து தம்மால் செய்திருக்கும் ஸூத்திரபாஷ்யங்களுக்கு வியாக்யா ன ரூபவர்ணனையும் அத்வைத உபதேசமும் செய்து வரும்படிக்கும் ஆக்யாபித்தார். ஸுரேஸ்வராசார்ய ரும் ஆக்ஞையின்படி ஸ்ருங்க கிரிக்குச்சென்று 18 வருஷமிருந்து, ஸகல காரியங்களையும் செய்து முடி த்து காமகோடி பீடத்திற்கு வந்தனர்.

ஆசார்யஸ்வாமிகள் சமாதிகாலம் சமீபித்த தை அரிந்து பிரதிவியில் ஆசந்திரார்கமாய் பிரஜ்வ லித்துவரும்பொருட்டு தம்நிஜபீடத்திற்கு கேவல ப்ரம்மசர்யராய்பீடாதிசராக நியமிக்க ஆக்யாபித்த ஸமயத்தில் தாம்ரபரணி தீர நிவாஸஸ்தாரன 7-வயதுள்ள வாலிபர் ஆசார்யனைத்தேடி அவ்விடம் வந் தார். அவருடன் ஆசார்யாள் 7-தினம்அகண்டவாதம் செய்துபக்வ தசையை அரிந்து வாதத்தில் வாலிபரு டையஸாஹஸத்திற்கு மகிழ்ந்து அவ்வாலிபருடைய பிதாவின் சம்மதிபெற்றுவாலிபருக்கு ஆஸ்ரமம்கொடு த்து பீடஸ்தராகச்செய்து, ஸர்வக்யாத்ம ஸ்ரீசரணே ந்திர சரஸ்வதி என்று திருநாமம் கொடுத்து இவர் அதிபால்யராகையால், கிருஹஸ்தாஸ்ரமத்திலிருந்து ஸன்யாஸாஸ்ரமத்தை அடைந்த தம்முக்ய சிஷ்ய ராகிய ஸ்ரீஸுரேஸ்வராசார்யாளுக்கு ஸர்வக்யஸ்ரீசர ணேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் யுக்தகாலம் வரை

யில்மடாதிகாரியாக இருந்து ஸகலகர்மங்களையும் நடத்தும்படி ஆக்ஞாபித்து பிடாதீஶரான ஸர்வ
க்ய ஸ்ரீசரணேந்திர ஸரஸ்வதிக்கு ஸுரேஶ்வரா
சார்யரை உனக்கு பூஜ்யராக அறிந்துகொண்டு
அவரிட ஆக்கினைக்குட்பட்டு நடக்கும்படி உத்
திரவுசெய்து அவரையும் ஆத்மபூஜார்த்தமான யோக
லிங்க சந்திர மௌளீஶவரரையும் ஸுரேஶ்வரா
சார்யாளுடைய ஆதீனம்செய்து நான்கு மடாதீசர்க
ளையும் தத்தம்மடாலயங்களை அடையும்படி ஆக்யாபி
த்து ஸ்ரீகாமாக்ஷியினுடைய பஶ்சமபாகத்தில் நிர்வி
கல்பஸமாதியிலிருந்து ஸ்ரீ ஜெகத்குரு ஶங்கரபக
வத்பாதாசார்ய ஸ்வாமிகள் கலியுகாதி 2624-க்கு
ரக்தாக்ஷி நாமஸம்வத்ஸரம் வைஶாக ஶுக்த ஏகா
தசியில் ஜ்யோதீஸ்வரூபீகரித்து விளங்கினர் அந்த ஸ
ன்னிதானத்தின் நிருகாலபூஜா நைவேத்ய தீபாராதன
நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ அவதா
ரோத்ஸவ வியாஸ பூஜாமஹோத்ஸவ விசுவரூபயாத்
ராதி மஹோத்ஸவங்களின் செலவு நிமித்தமாகசோழ
மண்டலாதிபதியாகிய ராஜஸேனமஹாராஜனுல் கிரா
மங்கள் விடப்பட்டும் சர்க்காரால் ப்ரதிவருஷமும்
கிஞ்சித்திரவியம் கொடுக்கப்பட்டும் நாளது வரை
யில்நடந்தேரி வருகிறது. ஸ்ரீமதகண்டபரிபூர்ண சத்
சிதானந்த ஸ்வரூபமான ஸ்ரீஜகத்குரு சங்கர பகவத்
பாதாசார்ய சுவாமிகள் இம்மாயாபிரபஞ்சத்தில்
ஜீவாத்மாக்கள்ஜனனமரணாதி துக்கஸாகரத்தைக்கட
ந்து சதுர்வித புருஷார்த்தங்களை அடைய திருஉள்
ளம் புரிந்து அல்பமாகிய 32-வயதிர்க்குள் தர்மதங்க

ளை துலைத்து ஷண்மதங்களை ஸ்தாபித்து அத்வைத அமிருதத்தை எங்கும் பிரவஹிக்கச்செய்து ஆத்ம கோடிகளை ரக்ஷித்து நின்றார்.

ஸ்ரீ சங்கர குரோபாஹ்ரி.

ஸ்ரீ காஞ்சீபுரியில் யோகலிங்கம்
ஸ்ரீ சிருங்ககிரியில் போகலிங்கம்
ஸ்ரீ நேபாலில் வரலிங்கம்
ஸ்ரீ பதரிகாஸ்ரமத்தில் முக்திலிங்கம்
ஸ்ரீ சிதம்பரத்தில் மோக்ஷலிங்கம்.

காஞ்சீபுரமடம்.

ஆம்னாயம்-மௌலாம்னாயம், மடம்-சாரதா, க்ஷேத்ரம் சத்யவிருத காஞ்சிக்ஷேத்திரம், தீர்தம்-கம்பாசரஸ் தேவதை-ஸ்ரீஏகாம்பரனாதர், சக்தி-காமகோடிவேதம்-ருக்வேதம், சாம்பிரதாயம்-மித்யாவார், ஆஸ்ரமம்-இந்திர சரஸ்வதி, ப்ரம்மசர்யம்-சத்யப்ரம்ம சர்யம், ஆசார்யாள்-ஸ்ரீஜெகத்குரு சங்கரபகவத் பாதாசார் யாள்மஹாவாக்யம்-ஓம் தத்ஸத், பீடம்-காமகோடி.

சிருங்ககிரி.

ஆம்னாயம்-தக்ஷிணாம்னாயம், மடம்-ஶாரதா, க்ஷேத்ரம்-ராமக்ஷேத்திரம், தீர்தம்-துங்கபத்ரா, தேவதா-வராஹம், ஶக்தி-ஶாரதா, வேதம்-கிருஷ்ணஎஜுஸ் ஸாம்ப்ரதாயம்-பூரிவார் ஆஸ்ரமம்-பாரதிப்ரம்மசர்யம் சைதன்யப்ரமம்ஆசார்யாள்-ஸ்ரீபிரிதிவீதவாசார்யாள்

மஹாவாக்யம்-அஹம்ப்ரம்மாஸ்மி, பீடம் - ஶாரதா பீடம்.

பதரிகாஶ்ரமமடம்.

ஆம்ஞயம்-உத்ராம்ஞயம்,மடம்-ஜ்யோதிர்மதி, க்ஷேத்ரம்-பதரிகாஶ்ரமம், தீர்தம்-அலகநந்த, தேவதா-நாராயணம், சக்தி - பூர்ணகிரி, வேதம் - அதர்வணம் ஸாம்பிரதாயம்-ஆனந்தவார், ஆஶ்ரமம்-கிரி,ப்ரம்மசர்யம்-ஆனந்தப்ரம்மம்,ஆசார்யாள்-ஶ்ரீத்ரோடகாசார்யாள் அர்த்தாத் ஆனந்தகிரி (ஶ்ரீ ஶங்கரவிஜயகர்த்தா)மஹாவாக்யம்-அயமாத்மா,பீடம்-ஜ்யோதிஷ்மதி பீடம்.

துவாரகா மடம்.

ஆம்ஞயம்-பச்சிமாம்ஞயம், மடம்-துவாரகா, க்ஷேத்ரம்—துவாராவதி, தீர்த்தம்-கோமதி, தேவதா-ஸித்தேஶ்வரம்,சக்தி-பத்ரகாளி,வேதம்-ஸாமவேதம்,ஸாம்பிரதாயம்-கீட்வார், ஆஶ்ரமம்-ஆஶ்ரமி,ப்ரம்மசர்யம், ஸ்வரூபப்ரம்மம்,ஆசார்யாள்-ஶ்ரீபத்மபாதாசார்யாள் மஹா-வாக்யம்-தத்வமஸி, பீடம்-காளிகாபீடம்.

ஜகன்னாதமடம்.

ஆம்ஞயம்-பூர்வாம்ஞயம், மடம் — ஜகன்னாதம், க்ஷேத்ரம்- ஜகன்னாதம், தீர்த்தம் - மஹோநதி, தேவதா-புருஷோத்தமம், சக்தி-விமலாதேவி, வேதம்-சுக்லயஜுஸ், சாம்பிரதாயம்-போகவார், ஆஶ்ரமம்-அரண்யர், ப்ரம்மசர்யம்-பிரகாசப்ரமம், ஆசார்யாள்-ஶ்ரீ அஸ்தாமலகாசார்யாள் மஹாவாக்யம்-ப்ரக்யானம் ப்ரம்மம், பீடம் விமலா.

அஞானியான சுத்தஸத்வ ஸ்வரூபமாய்விளங்கும் பரப்ரம்மமே திருமூர்த்தி ஸ்வரூபமாய் ஸர்வ ஜீவாத்மாக்களினுடைய ஜனனமரணமென்னும் ஸம்ஸாரமாகிய வ்யாதியை நாசம்செய்யும் வைத்யராய் அவித்யையை நாசம்செய்யும் வித்யைக்கிருப்பிடமாய் ஸர்வலோகத்திற்கும் குருவாய் காருண்ய கடாக்ஷவிக்ஷணயத்துடன் சின்முத்ராஸம்ஜ்ஞையால் ஞானோபதேசம் செய்யும் தக்ஷிணாமூர்த்தமாய் விளங்கும் பரமகுருவே, விஷ்ணு, விதி, வஸிஷ்டர், சக்தி, ப்ராக்ய பராசர், வியாஸர், சுகர், கௌதமர், ஸ்ரீகோவிந்த யதீஸ்வரர், ஸ்ரீசங்கராசார்யரென்னும்அத்வைத குருமூர்த்தங்களாக ப்ரகாசிக்கும் குருபரம்பரையைமுதலில் வணங்குவதே சமஸ்த விஷயங்களுக்கும் யெத்னமாயுள்ளது.

அப்படிப்பட்ட ஸ்ரீ ஜகத்குரு சங்கர பகவத்பாதாசார்யாளுடைய சிஷ்யர்களாகிய ஸுரேஸ்வரர், பத்மபாத, அஸ்தாமலக, த்ரோடகாசார்யாளாகிய நால்வரில் முக்யசிஷ்யரான ஸுரேஸ்வராசார்யாளுடைய சிஷ்யரூப நாமாவளியை பக்தியுடன் ஸ்மரித்தமாத்ரத்தில் அனேககோடிஜந்மத்தில் சம்பவித்த ஸம்ஸார துக்கநிர்ஹேதுவானமஹாபாதகங்களை நாசம்செய்து சிவஸாயுஜ்யபதவியை அடைவர்கள்.

ஸம்பூர்ணம்.

ஸ்ரீ ஜகத்குரு ஸங்கர பகவத்பாதாசார்ய சரித்ர ஸங்க்ரஹ ஸமாப்தி.

अथ जगद्गुरु परंपरा नामानि.

शंकरो ब्रह्मा शंकरो विष्णुः शंकरो देवो
महेश्वरः। शंकरः साक्षात् परं ब्रह्म तस्मै
श्री शंकराय नमः ॥
शंकराय सर्वलोकानां भिषजे भवरोगि
णाम्। निधये सर्वविद्यानां श्री दक्षिणामू
र्तये नमः ॥
विष्णुः विधिः वसिष्ठश्च शक्तिः प्राज्ञः पराशरः।
व्यासः शुको गौडपादः श्री गोविन्दयतीश्वरः
श्रीशंकराचार्यवर्यश्चेत्येते गुरवः स्मृ
ताः। कार्या नमस्याचार्याणां पद्मपादादि
प्रयत्नं प्रयत्नतः ॥
श्री शंकराचार्य शिष्याः स्तुत्याः सन्ति [illegible]ताः।
सुरेश्वरः पद्मपादो [illegible]तोटकः
सुरेश्वराचार्य यतेः [illegible] नादबोध [illegible]
पादहस्ता। [illegible] [illegible]रण [illegible]षः
[illegible]णां जनसमस्त [illegible]षाः ॥
[illegible] स्वस्तीक्ष्या [illegible] नाम्ना [illegible]
श्रीशंकराचार्यवर्य [illegible] [illegible]नायिना ॥
सर्वज्ञः [illegible] [illegible] [illegible]तीश्वरः।
[illegible] नन्दः [illegible] [illegible] [illegible]
श्रीकृष्णशंकरार्यस्तु [illegible]श्वरः।
श्री विद्यानृसिंह भारती वि [illegible] नाविव।
विद्यारण्य [illegible] [illegible] [illegible]
सदाशिव [illegible] विद्यारण्यतीश्वरः
श्री शंकरस्तु [illegible] [illegible] बोधकः
सच्चिदानन्द सच्चिदानन्दः

ஶ்ரீஜ்ஞாநாநந்தஸ்வாமிந: ஶ்ரீமஹாதேவ நாமக
[illegible] யோகீந்த்ரா ப்ரஹ்மாநந்த
[illegible]

[illegible] ஸச்சிதாநந்த: சந்த்ரஶேகர:
[illegible] வித்யாநந்த [illegible]
[illegible] மஹாதேவ [illegible]
ப்ரஹ்மாநந்த [illegible]
[illegible] ஶ்ரீசந்த்ர
ஶேகர:
[illegible] மஹாதேவஸ்ய [illegible]
சந்த்ரஶேகரயோகீந்த்ரா வித்யாதீர்த்தயதி: மஹா
[illegible] ப்ரஹ்மாநந்த [illegible]
[illegible]
மஹாதேவ [illegible]
ஶிவயோகீ [illegible]
[illegible] ஶ்ரீவித்யாதீர்த்தயோகீந்த்ர:
ஶங்கராநந்த யோகீந்த்ர: [illegible]
மஹாதேவஸ்ய தச்சிஷ்ய: சந்த்ரஶேகர நாமக [illegible]
போத: [illegible] போத: [illegible]
யோகீ [illegible] மஹாதேவ: [illegible]
சந்த்ரஶேகரயோகீ ச மஹாதேவயதீஶ்வர:
ஶ்ரீசந்த்ரஶேகரேந்த்ரஸ்ய மஹாதேவேந்த்ர ஸத்கு
ரு:
சந்த்ரஶேகர யோகீந்த்ரா மஹாதேவ [illegible]
தத: [illegible] பூர்வேஷாம் நாமாநி [illegible]
[illegible]
[illegible]
"இதி [illegible] ஸம்பூர்ணா"

இச்சரிதம் இந்துஸ்தானிபாஷையில் சுருக்கமாய் மிக
ச்சுவைபெற எழுதப்பட்டிருக்கிறது. அதை யான்
படித்ததில் அதிக சுவையை அறிந்து பிறர்க்குப்பய
ன்பட எண்ணித் தமிழில் எழுதலானேன். கதிகதா
திகளை தன்வயப்படுத்திக்கொள்ளும் சுபாவகுணமு
டைய சாகரத்தைப்போன்ற கல்வியிற்சிறந்த ஞான
வான்களாகிய சற்குரு சரணாரவிந்த பக்தி சிரோன்ம
ணிகளாய் விளங்கும் அம்ஸகுணசீலர்களான பெரி
யோர்கள் கடாக்ஷித்து அங்கீகரிப்பரெனும் நம்பி
க்கையாலும் சர்வ பிரோபகராய் விளங்கும் பரமா
த்ம சொரூபரான சற்குருவினருளால் முடிவுற்றது.